

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.01.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் 526 புதிய வீடுகள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிக்கோ இருதயராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.என்.சேகரன், அரசுத்துறை உயர் அலுவலர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகர தி.மு.க. மற்றும் மாவட்ட மாணவர் அணி சார்பில் மயிலாதுறையில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.என்னீர்செல்வம், தலைமைக் கழக பேச்சாளர்கள் பொள்ளாச்சிசித்திக், நாத்திகம் நாகராஜன், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி. சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, பொருளாளர் மகா.அலெக்சாண்டர் மற்றும் பலர் உள்ளனர்.

## மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா தலைமையில்

# நாமக்கல் மாவட்டத்தில் ரூ.4.95 கோடி மதிப்பில் 20,470 இலவச வீட்டுமனை பட்டா!

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினர்!

*நாமக்கல், ஜன. 30 -*

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், சுமங்கலி திருமண மண்டபத்தில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு, , ரூ.4.95 கோடி மதிப்பில் 495 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கி, தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் நம்முடைய அடிப்படை தேவைகளாக உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம், கல்வி மற்றும் தொழில் போன்ற தேவைகளை அறிந்து ஒவ்வொரு நபரும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதனடிப்படையில், கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் மாநில அளவில் அதிக வீடுகள் நாமக்கல் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, நாமக்கல் மாவட்டத்தில் சரியான முறையில் நில அளவை செய்யப்பட்டு 860 நபர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. சுதந்திரம் அடைந்ததில் இருந்து சாலை வசதி இல்லாத போதமலை மக்களின் கோரிக்கை ஏற்று ரூ.140 கோடி மதிப்பீட்டில் 31 கி.மீ தொலைவிற்கு போதமலைக்கு சாலை அமைக்கும் பணி, இராசிபுரத்திற்கு ரூ.53.39 கோடி மதிப்பீட்டில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை புதிய கட்டடம் உள்ளிட்ட பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்துள்ளார்கள். மேலும், அதிகபட்சமாக இராசிபுரம் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் வாழும் 4702 நபர்கள் இலவச வீட்டுமனை பட்டாக்களை பெற்றுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் ஆர்.பார்த்தீபன், ஒன்றியக்கழகச்செயலாளர்கள் கே.பி.ராமசாமி, கே.பி.ஜெகநாதன் மற்றும் ஆர்.எம்.துரைசாமி, இராசிபுரம் வட்டாட்சியர் சரவணன், உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பாசிச பா.ஜ.க அரசின் யு.ஜி.சி – 2025

# வரைவு நெறிமுறைகளை திரும்பப்பெற வலியுறுத்தி கருத்துகளைப் பதிவு செய்வீர்!

### பொதுமக்கள் – மாணவர்கள் – பெற்றோர் – கல்வியாளர்களுக்கு கழக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் வேண்டுகோள்!

சென்னை, ஜன.30-

கல்வி உரிமைக்குப் பேராபத்து வந்துள்ளது. கூட்டாட்சியைச் சீர்குலைத்து, மாநில அரசின் உரிமைகளை பறிக்க நினைக்கும் யு.ஜி.சி.-க்கு கடும் கண்டனம் தெரிவித்து - பாசிச பா.ஜ.க. அரசின் யு.ஜி.சி.-2025 வரைவு நெறிமுறைகளை திரும்பப் பெற வலியுறுத்தி, பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் ஆகியோர் தங்களது கருத்துகளை பதிவு செய்வீர் என மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

எல்லோரும் படித்து, எல்லோரும் வேலைக்குப் போய், எல்லோரும் தலைநிமிர்வது பிடிக்காத பாசிச பா.ஜ.க. அரசால் தொடர்ச்சியாக கல்வித் துறையில் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. கல்வியைச் சிதைப்பதற்காகவே புதிய தேசிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்து திணிக்கிறார்கள். அரசுப் பொதுத் தேர்வு என்ற பெயரால் வடிகட்டி, வடிகட்டி அனைவரையும் கல்வியைத் தொடர முடியாமல் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அதனை திராவிடமாடல் நாயகன், முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு கடுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறது.

**நிதிநல்கைக் குழு**

இந்நிலையில், 06.01.2025 அன்று பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு (UGC), பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பணியாளர்கள் நியமனம் மற்றும் பதவி உயர்வுக்கான குறைந்தபட்சத் தகுதிகள் மற்றும் உயர்கல்வியின் தரத்தைப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் விதிமுறைகள்-2025க்கான வரைவு ஒன்றை வெளியிட்டுள்ளது. இது, முழுவதுமாக அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணாகவும், பல்கலைக்கழகங்களை உருவாக்கி நிர்ணயிக்கும் மாநில அரசின் உரிமைகளை பறிக்கக் கூடிய வகையில் அது அமைந்துள்ளது. குறிப்பாக, கல்லூரி ஆசிரியர்கள் பணி நியமனத்திற்கும், பதவி உயர்வுக்கான விதிமுறைகளில் பரிந்துரைக்கும் பல திருத்தங்கள் கல்லூரிகளின் தரத்தை உயர்த்துவதற்காக என்பதை விட, கல்வியை தனியார்மயமாக்குதலில் உள்ள காரணத்தையே அது உணர்த்துகிறது. துறைகளுக்கு தொடர்பில்லாத அன்னியர்களை ஆசிரியர்களாக பரிந்துரைக்கிறது; ஆசிரியர் பணி நலன்கள் தொடர்பான அரசு சட்டங்களை ரத்து செய்யவும்; குறிப்பிட்டதுறைகளில்நிபுணத்துவத்திற்கான உயர்கல்வி பாடத்திட்டங்களை சத்தற்ற பொதுக்கல்வியாக்கும் திட்டங்கள்; பள்ளி கல்வியை ஓரங்கட்டிவிட்டு தேசிய நுழைவுத் தேர்வுகள் அடிப்படையில் உயர்கல்வி மாணவர் சேர்க்கையை நடைமுறைப்படுத்துதல்; அதன்மூலம் கார்ப்பரேட் ‘கோச்சிங்’ நிறுவனங்களை கொழுக்க வைக்க உதவும் விதிகள்; உயர்கல்வியை நிறைவு செய்ய விடாமல் நலிந்த சமூக பிரிவு மாணவர்களின் ‘இடைநிற்றலை’ ஊக்குவிக்கும் சமூக அநீதிக்கான விதிகள்; துணைவேந்தர் தேர்வு உள்ளிட்ட அனைத்து தேர்வு குழுக்களிலும் ஒன்றியத்தின் நியமன உறுப்பினர்களின் ஆதிக்கத்திற்கு வழி செய்யும் விதிகள்; ஒட்டுமொத்தத்தில் கல்வி அமைப்புகளின் ஜனநாயக கூறுகளை அறவே ஒழிக்கும் விதிகளாக உள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை நியமிப்பதில், மாநில அரசுக்கான உரிமையை அறவே நீக்கிவிட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநருக்கே முழு அதிகாரத்தையும் வழங்கும் விதிமுறை மாநில உரிமைக்கு எதிரானது. கூட்டாட்சித் தத்துவத்திற்கு முரணானது. அத்துமீறலுக்குரியது.

மேலும், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பதற்கு கல்வியாளர் மற்றும் கல்வித் தகுதி, அனுபவம், சிறப்பு தகுதிகள் உள்ளிட்டவைகளை கடந்து தொழிற்சாலையிலிருந்து, பொதுத்துறை நிறுவனத்திலிருந்து வல்லுநர் என்ற வகையில் கல்வியாளர் அல்லாத (Non Acadamician) நபர்களை துணைவேந்தராய் நியமிக்கும் ஆபத்தான முடிவுக்குப் பரிந்துரைக்கிறது.

**பல்கலைக் கழகங்களை முடக்கும் செயல்!**

தேசிய கல்விக் கொள்கை 2020ஐ ஏற்கவில்லை என்றால் அத்தகைய பல்கலைக்கழகங்கள் பட்டப் படிப்பை நடத்த இயலாது. அதாவது பல்கலைக்கழகம் பட்டம் வழங்கினாலும் செல்லாது. இந்த அறிவிப்பு மாநிலப் பல்கலைக்கழகங்களை முடக்கும் செயல் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஆக, இனி மாநிலம் என்ற ஒரு அரசமைப்பே இருக்காது என்ற நிலையை நோக்கி ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் செயல்பாடு இருப்பதன் வெளிப்பாடாக பல்கலைக்கழக வரைவு விதிகள் இருப்பதை நாம் உணர வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்கள் நியமிப்பதில் மாநில அரசுகளின் பங்கைக் கட்டுப்படுத்தும் வகையிலும், பல்கலைக்கழகங்களில் இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகளுக்கான சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வுகளை அறிமுகப்படுத்துவது உள்ளிட்ட நிர்வாக நடைமுறைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகள் 2025-ஐ திரும்பப் பெற வலியுறுத்தி, கழகத் தலைவர்- முதலமைச்சர் அவர்கள் கடந்த 09.01.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தனித்தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்.

அந்தத் தனித் தீர்மானம் மீது உரையாற்றுகிற வாய்ப்பினை நான் பெற்றேன். அப்போது, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஏற்றியிருக்கின்ற இந்த ‘தீ’ இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பரவட்டும், பரவட்டும் என்று சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்தேன்.

**கண்டனங்கள்!**

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள், பாசிச பா.ஜ.க. அரசின் பிற்போக்குத் தனத்தை எதிர்க்கும், முற்போக்குச் சிந்தனை கொண்ட மாநிலங்களான டெல்லி, கேரளா, தெலங்கானா, மேற்கு வங்காளம் இமாச்சல் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், ஜார்கண்ட், கர்நாடகா மற்றும் பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதினார். அதில், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் (யு.ஜி.சி. 2025 வரைவு நெறிமுறைகள்) அறிக்கைக்கு எதிராக தங்களது கண்டனங்களை பதிவு செய்யவும், தீர்மானம் நிறைவேற்றவும் கேட்டுக் கொண்டார். அதனைத்தொடர்ந்து, பெரும்பாலான மாநிலங்கள் தங்களது கண்டனத்தைப் பதிவு செய்ததோடு, கேரளா அரசு தனது சட்டமன்றத்திலும் இந்த வரைவு நெறிமுறைக்கு எதிராக தனித் தீர்மானத்தை கடந்த 21.01.2025 அன்று நிறைவேற்றியது.

யு.ஜி.சி.-யின் இவ்விதிகள் மாநிலங்களின் கல்வி அமைப்புகளின் தன்னாட்சி உரிமைகளை இல்லாமல் செய்து விடுகின்றன. உயர்கல்வியை சீர்குலைத்து, உயர்கல்விப் பாடத்துறைகளை நீர்த்து போக செய்து, தரமான உயர்கல்வியை நம் மாணவர்களுக்கு மறுத்து விடுகின்றன. பல வீனமான சமூகப் பிரிவு மாணவர்களின் இடைநிற்றலை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டின் கல்வித் தரத்தை சீர்குலைக்கும் பாசிச பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக விளங்கும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் வரைவு நெறிமுறைகள் தற்போதுள்ள உயர்கல்வியை முற்றிலுமாக வணிகமயமாக்கும் வகையிலும், ஆசிரியர்-மாணவர் நலன்களை குழிதோண்டிப் புதைக்கும் வகையிலும் உள்ளதை உணர்ந்து, அதனை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென்று தி.மு.க. மாணவர் அணி கடந்த 09.01.2025 அன்று நடைபெற்ற மாணவர் அணி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியது. அதனைத் தொடர்ந்து, தி.மு.க. மாணவர் அணி உள்ளிட்ட பல்வேறு மாணவர் அமைப்புகள் கொண்ட தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு (FSO-TN) சார்பில் கடந்த 10.01.2025 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

உயர்கல்வியில் பீடுநடை போடும் தமிழ்நாட்டின் முதன்மையை வீழ்த்துவதற்காகவே பாசிச பா.ஜ.க. அரசு பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு மூலம் கொண்டுவந்துள்ள திருத்தங்களை எதிர்த்து, மாணவர் நலன், ஆசிரியர் நலன், உயர்கல்வியின் தரம், கல்வி அமைப்புகளின் தன்னாட்சி உரிமை, மாநிலங்களின் சட்டப்பூர்வமான தன்னாட்சி உரிமை, இந்திய கூட்டாட்சியின் அடிப்படை ஆகியவற்றைப் பாதுகாத்திட நாம் அனைவரும் மக்கள் இயக்கமாக செயல்பட்டு, நம் அனைவரின் கண்டன குரல்களையும் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும். மக்கள் இயக்கமாக ஒன்றிணைவோம்; யு.ஜி.சி.யின் அத்துமீறலை முறியடிப்போம்!

ஒன்றிய பா.ஜ.க. அரசு கல்வித்துறையில் யு.ஜி.சி. அமைப்பை வைத்துக் கொண்டு மேற்கொள்ளும் அதிகார அத்துமீறல் போக்குகளை தடுத்து நிறுத்த தி.மு.க.வின் நீண்ட கால கோரிக்கையான கல்வியை ஒத்திசைவுப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வருவதே ஒரே தீர்வாக இருக்க முடியும்.

இது வெறும் கல்வி தொடர்புடையது அல்ல. ஜம்மு-காஷ்மீர் மாநிலம் எப்படி எந்த விவாதமும் இல்லாமல் ஒன்றிய பிரதேசம் (Union Territory) ஆக்கப்பட்டதோ, அதைவிட மோசமாக தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களையும் ஒன்றிய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் நிர்வாக அலகுகளாக மாற்றும் மிகப்பெரிய சட்ட நடவடிக்கை என்பதை நாம் உணர வேண்டும்.

**குடியாட்சியை குழிதோண்டிப் புதைக்கும் செயல்!**

அரசியலமைப்பு சட்டம் வழங்கியிருக்கும் சட்டம் இயற்றும் உரிமைப் பெற்ற மாநில சட்டப்பேரவைகளில் சட்டம் இயற்றப்பட்டு அமைக்கப்படும் பல்கலைக்கழகங்களை, எவ்வித சட்டம் இயற்றுகிற உரிமையும் அற்ற, நெறிமுறைகளை மட்டும் வழங்கக்கூடிய யு.ஜி.சி. என்ற அமைப்பைக் கொண்டு ஒரு மாபெரும் சட்ட விதிமீறலையும், குடியாட்சி தன்மையை குழிதோண்டி புதைக்கும் வேலையை செய்து, மாநில உரிமைகளை களவாட நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் சர்வாதிகாரத் தன்மையை மக்கள் நாம் உணர வேண்டும்.

எனவே, கழக மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர்-துணை அமைப்பாளர்கள், மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளின் முன்பாக இது தொடர்பாக சுவரொட்டிகளை ஒட்டி, தமிழ் மாணவர் மன்றம் மூலமாக கல்லூரி மாணவர்களிடம் பிரச்சாரம் மேற்கொண்டு, கல்வி உரிமை, மாநில உரிமை, கூட்டாட்சி தத்துவம், சமூகநீதி, சமவாய்ப்பு, அரசியமைப்பு சட்டம் ஆகியவற்றை காத்திட, யு.ஜி.சி. வெளியிட்டுள்ள 2025 வரைவு நெறிமுறைகள் அறிக்கையை திரும்பப் பெற வலியுறுத்தி வரும் 05.02.2025-க்குள் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள், இளைஞர்கள், கல்வியாளர்கள், கழக உடன்பிறப்புகள், தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள், கழக மாணவர் அணியினர் அனைவரும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் இந்த வரைவு நெறிமுறைகளை எதிரித்து, நமது மாநில அரசின் கல்வி உரிமையை பாதுகாக்க #UGC Draft Guidelines 2025 வரைவுக்கு எதிரான உங்கள் எதிர்ப்புகளை / கருத்துகளை / கண்டனங்களை draft-regulations@ugc.gov.in என்ற மின்னஞ்சலுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

Subject : Withdraw UGC Draft Guidelines 2025

I strongly oppose the University Grants Commission's (UGC) Draft Guidelines 2025 and I request UGC to immediately withdraw it.

1. The draft gives full powers to the Chancellors (state governors who are Union government appointees) in the selection of Vice-Chancellors of universities. The proposed changes deny state governments any say in selecting V-Cs for state-run universities that are “fully funded and managed by the state governments”.

2. Another key change in the draft regulations is that university Vice-Chancellors need not be academicians/professors, but can be individuals at senior levels in industry or public administration. This will lead to corporatisation and saffronization of education.

3. Education is a subject under the Concurrent List in our Constitution, and hence we consider that the move of the UGC to issue this notification unilaterally as unconstitutional.

These guidelines are against the federal principles upheld by the nation. This move not only reduces the autonomy of state governments but also threatens to undermine the diversity and inclusivity that are central to India's higher education system.

Hence I request UGC to immediately withdraw your Draft Guidelines 2025.

மேலும், மேற்குறிப்பிட்ட கருத்துகளை பொதுமக்கள் அனைவரும் தங்களது சமூக வலைதளங்களில் பகிர்ந்து, @PMOIndia @dpradhanbjp @EduMinOfIndia @ugc_india @PIB_India ஆகிய பக்கங்களை இணைத்து பதிவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.


## ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர்

# கழக மூத்த முன்னோடி சா.மணிமொழி நம்பி மறைவு!

### அமைச்சர் கோவி.செழியன் - சு.கல்யாணசுந்தரம் எம்.பி. - செ.இராமலிங்கம் நேரில் அஞ்சலி!

*தஞ்சாவூர், ஜன.30-*

தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடை மருதூர் ஒன்றியம், கொட்டமங்கலத்தில் வசித்த ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் சா.மணிமொழி நம்பி (வயது 100) வயது மூப்பின் காரணமாக 27.01.2025 திங்கள் அன்று மாலை 5.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் மீது தீரா பற்றுக் கொண்ட மறைந்த சா.மணி மொழி ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் துணைச் செயலாளராக பணியாற்றியவர். இவர் முரசொலி நாளிதழுக்காக பல்வேறு கட்டுரைகளையும், துணுக்குகளையும், தஞ்சை பகுதி கழக செய்திகளையும் வழங்கியவர், கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும், கலந்து கொண்டு சிறை சென்றார். மறைந்த மணி மொழிக்கு அழகியநம்பி என்கிற மகன் உள்ளார்.

கழக மூத்த முன்னோடியின் மறைவுச் செய்தியறிந்த உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், ஒன்றியச் செயலாளர்கள் வலங்கைமான் அன்பரசன், கோ.க.அண்ணாதுரை, மிசா.என். மனோகரன், இர. உதயச்சந்திரன், பேரூர் செயலாளர்கள் சுந்தர.ஜெயபால், கோ.சி.இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் கருணாநிதி, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா, ஒன்றிய அமைப்பாளர் சிலம்பரசன் உள்ளிட்ட கழக முன்னோடிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 28.01.2025 செவ்வாய் மாலை 4.00 மணிக்கு அவரது சொந்த ஊரான கொட்டமங்கலத்தில் நடைபெற்றது.

## நெய்வேலி என்.எல்.சி.யில்

# குடியரசுத் தின விழா!

### ரூ.22.46 இலட்சம் பரிசுத் தொகை வழங்கல்!

நெய்வேலி, ஜன. 30–

நெய்வேலி என்.எல்.சி. இந்தியா நிறுவனம், நாட்டின் 76 வது குடியரசு தினத்தை,26.01.2025அன்றுநெய்வேலி வட்டம்10ல் உள்ள பாரதி விளையாட்டு அரங்கத்தில் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தவிழாவில்வழக்கமான உற்சாகத்துடன்கொண்டாடியது.

என்.எல்.சி.இந்தியாநிறுவனத்தின் தலைவர்மற்றும்மேலாண் இயக்குநர் திரு பிரசன்ன குமார் மோட்டுபள்ளி, நிறுவனஇயக்குனர்கள்,கண்காணிப்பு துறை தலைமை அதிகாரி, மத்திய தொழிலக பாதுகாப்புப் படையின் துணைத்தலைமைஆய்வாளர்,மூத்த அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் முன்னிலையில்,மூவர்ணக்கொடியை ஏற்றி வைத்தார். பின்னர், மத்திய தொழிலகப்பாதுகாப்புப்படைவீரர்கள், என்.எல்.சி.ஐ.எல். ஊர்க்காவல் படையினர், என்.சி.சி. & என்எஸ்எஸ் மற்றும் நெய்வேலி பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் வழங்கியஅணிவகுப்புமரியாதையை ஏற்றுக்கொண்டார். முன்னதாக, நகர நிர்வாக வளாகத்தில் உள்ள தேசத்தந்தை மகாத்மா காந்தியின் சிலைக்கு பிரசன்ன குமார் மோட்டுபள்ளி, மாலை அணிவித்து மரியாதைசெலுத்தினார். குடியரசுதின விழாவானது. தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் நிறுவனத்தின் கருப்பொருள் (ஸ்கீம்) பாடலுடன் தொடங்கியது, மனிதவளத்துறைஇயக்குனர்ஒருசமீர் ஸ்வரூப்அனைவரையும்வரவேற்றார்.

இவ்விழாவில் ரூ.22,46,400 பரிசுத்தொகைபல்வேறுபள்ளிகளைச் சேர்ந்த மாணவமாணவிகள் 3744 பேர்க்கு வழங்கப்பட்டது.

இவ்விழாவில்,என்.எல்.சி.ஐ.எல். நிறுவனத்தின் தொழிலாளர், ஊழியர்கள், ஒப்பந்த மற்றும் சொசைட்டி தொழிலாளர்கள், மத்திய தொழிலகப்பாதுகாப்புப்படைவீரர்கள் & அதிகாரிகள், அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகள் சங்க நிர்வாகிகள், எஸ்சி/எஸ்டி,எஸ்டி மற்றும் ஓபிசி நலச் சங்கங்களின் நிர்வாகிகள், ஒன்றிய பொதுத் துறையில் பணிபுரியும் மகளிர் அமைப்பின் (விப்ஸ்) நிர்வாகிகள், மகளிர் மன்ற நிர்வாகிகள், பள்ளிகள் மற்றும் கல்லூரியின் முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவ – மாணவிகள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.




கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் வீரவணக்க நாள் கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், மாநில இலக்கிய அணி இணை செயலாளர் ஈரோடு. இறைவன், தலைமைக் கழக பேச்சாளர்கள் ஒப்பிலாமணி, அருள்தாஸ் சிறப்புரை ஆற்றினார்கள். கூட்டத்தில் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜெயேந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.